# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | CC 108/2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 11 |

| | | |
|---|---|---|
| Name | : | கருப்புசாமி |
| Father's Name | : | குமாரசாமி |
| Village | : | அரியலூர் |
| Taluk | : | அரியலூர் |
| Calling | : | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை –1 |
| Religion | : | இந்து |
| Age | : | 55 |
| ACCUSED | | ரெங்கநாதன் ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது அரியலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக நிலை–1 ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் 18.01.2023 அன்று பெரம்பலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக நிலை–1 ஆக பணியில் இருந்த பொழுது காலை 09.00 மணியளவில் பெரம்பலூர்காவல் நிலைய குற்ற எண்.31/2023 விபத்து வழக்கில்சம்மந்தப்பட்ட TN 46 K 7851 Hero Honda SPlender plus என்ற இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்யுமாறு பெரம்பலூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி எனது அலுவலகத்தில் வைத்து விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தை ஆய்வு செய்தேன். மேற்படி TN 46 K 7851 Hero Honda SPlender plus வாகனத்திற்கு கீழ்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டிருந்தன.

1. முன்வலதுபுற இண்டிகேட்டர் மற்றும் முகப்பு விளக்குகள், ஸ்கூப், மீட்டர் பேனல், டயல்கள் ஆகியவை சேதம் அடைந்து காணப்பட்டன.

2. முன்புற சஸ்பென்சன் போர்க் வளைந்து காணப்பட்டது.

3. முன்புற ஹேண்டில் பாரில் உள்ள முன்புற பிரேக் லிவர் உடைந்து காணப்பட்டது.

4. இடதுபுறம் உள்ள கியர்மாற்றும் லிவர் வளைந்து காணப்பட்டது.

வாகனம் ஓட்டி பார்க்க இயலாத நிலையில் நின்ற நிலையில் வைத்து ஆய்வு செய்த போது பிரேக் சிஸ்டம் மற்றும் டயர்கள் சரியாக இருந்தது. இந்த வாகன விபத்து இயந்திர கோளாறினால் ஏற்பட்டிருக்கவில்லை என்று சான்று வழங்கினேன். மேற்படி TN 46 K 7851 Hero Honda SPlender plus என்ற இருசக்கர வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இதே விபத்து வழக்கில்சம்மந்தப்பட்ட TN 12 D 0567 என்ற பதிவெண் கொண்ட Renold Duster இலகுரக வாகனத்தை வாகன ஆய்வு செய்யுமாறு பெரம்பலூர்காவல் உதவிஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின்படி 18.01.2023 அன்று 09.10 மணியளவில் எனது அலுவலகத்தில் வைத்து வாகன ஆய்வு செய்தேன். மேற்படி TN 12 D 0567 வாகனத்திற்கு கீழ்க்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டிருந்தன.

1. முன்புற கண்ணாடி விரிசலுடன் காணப்பட்டது.

2. முன்புற பம்பர், கிராஸ் மெம்பர், பேனட், கிரில், முன் வலதுபுற பெண்டர், முன்புற முகப்பு விளக்கு மற்றும் இண்டிகேட்டர்கள் ஆகியவை சேதம் அடைந்து காணப்பட்டன.

3. முன்புற ஆக்ஸில் உள்ள வலதுபுற லோயர் ஆர்ம் வளைந்து காணப்பட்டது.

4. இன்ஜினின் முன்பகுதியில் உள்ள ரேடியட்டர், இன்டர் கூலர் மற்றும் பேன்லீப் ஆகியவை சேதம் அடைந்து காணப்பட்டன.

வாகனம் ஓட்டி பார்க்க இயலாத நிலையில் நின்ற நிலையில் வைத்து ஆய்வு செய்த போது பிரேக் சிஸ்டம் மற்றும் டயர்கள் சரியாக இருந்தது. இந்த வாகன விபத்து இயந்திர கோளாறினால் ஏற்பட்டிருக்கவில்லை என்று சான்று வழங்கினேன். மேற்படி TN 12 D 0567 என்ற வாகனத்திற்குண்டான வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இருசக்கர வாகனம் சாலையை கடக்கும் பொழுது கார் அதன் மீது மோதினால் இரண்டு வாகனங்களுக்கும் மேற்கண்ட சேதாரங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலீசார் மேற்கண்ட விவரம் குறித்து என்னிடம் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

கார் சென்று கொண்டிருக்கும்போது இருசக்கர வாகனம் திடீரென்று சாலையின் குறுக்கே சென்று மோதியிருந்தாலும் மேற்படி சேதாரங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை 10 நிமிட இடைவெளியில் ஆய்வு செய்தேன். விபத்து நடைபெற்ற நாளிலிருந்து 1 வார கால இடைவெளியில் வாகனத்தை ஆய்வு செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :– இல்லை**

**ஒப்பம்/– கி. முரளிதரகண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**